இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 04.11.2026

தடுக்க மாட்டாராம்... தனி நீதிமன்றம் அமைப்பாராம்!

குற்றத்தைத் தடுக்கச் சொன்னால் தனி நீதிமன்றம் அமைக்கப் போகிறேன் என்று அறிவிப்பு செய்கிறார் முதலமைச்சர் விஜய். எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் இருக்கிறவர்தான் விஜய்.

நாடு முழுக்க பாலியல் குற்றங்கள் அதிகரித்து விட்டது. அதைத் தடுக்க முதலமைச்சர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக குற்றங்கள் அனைத்தும் நடந்து முடிந்த பிறகு, விசாரணை செய்ய தனிநீதிமன்றங்கள் அமைக்கப்போவதாக பீடிகை போட்டுள்ளார் விஜய். பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் 26 போக்சோ நீதிமன்றங்களை அமைக்க விஜய் உத்தரவிட்டு இருப்பதாக அரசின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

நாடு முழுக்க அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுக்க முதலமைச்சர் என்ன செய்தார்? எதுவுமில்லை. முதலில் அவர் தன் கட்சியினர் மீது வரும் பாலியல் புகார்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. ஒரு அமைச்சர் தன் கட்சி பெண் உறுப்பினர்களை எப்படி பாலியல் வேட்டையாடி வருகிறார் என்பது சமூக வலைதளங்களில் அவரது கட்சிப் பெண்களால் ஆடியோக்களாக வெளியாகி வருகிறது. தனது பாலியல் இச்சைகளுக்கு பயன்படுத்திக் கொண்ட பிறகு தான் அவர் பதவிகளைப் பெற்றுத் தருகிறார், இதனை அவர் வழக்கமாக வைத்துள்ளார் என்று அந்தப் பெண்கள் சொல்கிறார்கள். இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் போக்சோ போராளி விஜய்?

ஆட்சி மீதோ, தன் மீதோ சமூக வலைதளத்தில் வரும் பதிவுக்கு எதிராக கைது நடவடிக்கை எடுக்கும் முதலமைச்சர் விஜய், ஒரு அமைச்சர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது குற்றம் சாட்டியவர் விஜய் ரசிகை. த.வெ.க. கட்சியில் இருப்பவர். எம்.எல்.ஏ. பெயரைச் சொல்லி தான் த.வெ.க. உறுப்பினர்களால் அந்த ரசிகை வேட்டையாடப்பட்டார். இதுவரை எம்.எல்.ஏ. சரவணன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவரது பதவியைப் பறித்திருக்க வேண்டாமா போக்சோ போராளி விஜய்?

அமைச்சர்களோ, த.வெ.க. எம்.எல்.ஏ.க்களோ தவறு செய்தால் விஜய்யால் நடவடிக்கை எடுக்க முடியாது. அவர்களது தயவால்தான் இவர் முதலமைச்சராக இருக்கிறார். அவர்களைத் தூக்கினால் தனது நாற்காலி கவிழ்ந்துவிடும். அதனால் அவர் நடவடிக்கை எடுப்பது இல்லை.

த.வெ.க. மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் மீதுதான் எத்தனை பாலியல் புகார்கள். இதுவரை அவர் எடுத்த நடவடிக்கை என்ன?

இதேபோல் போதைப் பொருள் கடத்தல் சட்டப்படி பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கவும் 7 தனி நீதிமன்றங்களை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார் முதலமைச்சர் விஜய். இதை அமைப்பதற்கான தகுதி அவருக்கு இருக்கிறதா?

வெட்டவெளியில் போதை மருந்து பயன்படுத்தி, அதனை வீடியோவாகவும் எடுத்து வெளியிட்டவர் அமைச்சர் சரத்குமார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அந்த வீடியோ காட்சிகள் வெளியானதும் அவர் பதவியை பறித்திருந்தால் விஜய் சரியான நடவடிக்கை எடுப்பார் என்று சொல்லலாம். சரத்குமாரை சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலக வைத்திருந்தால் விஜய் சரியான நடவடிக்கை எடுப்பார் என்று சொல்லலாம். இதைச் செய்யவில்லை விஜய். 'அமைச்சர் சரத்குமார் அதிகமான பொது நிகழ்ச்சிகளில் தலைகாட்ட வேண்டாம்' என்று உத்தரவு போட்டுள்ளார்களாம். இதெல்லாம் ஒரு தண்டனையா?

சரத்குமாரை நீக்கினால் ஆட்சிக்கான ஆதரவில் ஒன்று குறைந்து போகும். எனவே தனது நாற்காலியைக் காக்க சரத்குமாரைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார் விஜய்.

நாகையில் ரூ.300 கோடி மதிப்பிலான 135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப் பொருள் கடத்தியதாக த.வெ.க. நிர்வாகி பூபாலனை மத்திய வருவாய் புலனாய்வு காவல் துறை கைது செய்துள்ளது. விஜய் அரசு கைது செய்ய வில்லை. ஒன்றிய அரசு தான் கைது செய்துள்ளது. விஜய் வைத்துள்ள போதைப் பொருள் தடுப்புத் துறை என்ன செய்கிறது? அவர்கள் ஏன் பூபாலனை கைது செய்யவில்லை. ஒழுங்காக கண்காணித்திருந்தால் இவர்கள் தானே பூபாலனை கைது செய்திருக்க வேண்டும்? த.வெ.க. நிர்வாகி என்பதற்காக த.வெ.க. ஆட்சி பூபாலனை கைது செய்யாமல் வைத்திருந்ததா? இந்த ஆட்சியின் தயவில்தான் அவர் போதைப் பொருள் கடத்தினாரா?

கைது செய்யப்பட்ட பூபாலன் த.வெ.க.நிர்வாகி. த.வெ.க. தலைவர் விஜய் விளக்கம் அளிக்க வேண்டாமா? உள்துறையைக் கையில் வைத்திருப்பவர் முதலமைச்சர் விஜய். முதலமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டாமா?

பூபாலனை கட்சியில் சேர்த்து விட்டு செயற்குழு உறுப்பினர் பதவியை வாங்கித் தந்தவர் த.வெ.க. நாகை மாவட்டச் செயலாளர் சுகுமாறன். அவர் மீது விஜய் என்ன நடவடிக்கை எடுத்தார்? பூபாலனின் பணம் கடந்த சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க.வுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது என்றால் கட்சித் தலைவர் என்ற முறையில் விஜயின் பதில் என்ன? அவர் இதற்கு பொறுப்பேற்க வேண்டாமா? பூபாலனுக்கு துணையாக இருந்த காவலர்கள் இருவர், இடமாற்றம் தான் செய்யப்பட்டுள்ளார்கள். விஜய் பொறுப்பில் இருக்கும் உள்துறையின் லட்சணம் இதுதான்.

கேரள மாநில மதுவிலக்கு காவல்துறை நீலகிரிக்கு வந்து முகமது நசீப் என்பவரை அக்டோபர் 23 ஆம் தேதி கைது செய்தார்கள். முகமது நசீப், த.வெ.க.வின் நீலகிரி மேற்கு மாவட்ட இணைச் செயலாளர் பதவியில் இருக்கிறார்.

இவர் மீதான குற்றம் என்ன தெரியுமா? கேரள மாநிலம் வயநாடு பகுதியில் MDMA போதைப் பொருள் கடத்தியதாக வழக்குப் பதிவாகி இருக்கிறது. தன் கட்சி மாவட்ட நிர்வாகி போதைப் பொருள் கடத்தியது த.வெ.க. ஆட்சிக்கு தெரியாமல் போனது எப்படி? உள்துறையை வைத்து விஜய் என்ன செய்கிறார்.

தமிழ்நாட்டில் த.வெ.க. நிர்வாகிகளால் கடத்தப்படும் போதைப் பொருளை மத்திய வருவாய் புலனாய்வு போலீஸார் கண்டு பிடிக்கிறார்கள். கேரள போலீஸார் கண்டு பிடிக்கிறார்கள். விஜய் போலீஸ் கண்டுபிடிக்கவில்லை. தமிழ்நாடு காவல் துறையின் கைகளை கட்டிப் போட்டுள்ளார் விஜய்.

குற்றங்களைத் தடுக்காமல் வேடிக்கை பார்க்கிறவர்களாக காவல் துறையை மாற்றிவிட்டு, தனி நீதிமன்றம் போடுவதால் என்ன பயன்?

குற்றத்தைத் தடுக்க திறமை இல்லாத முதலமைச்சர், சமாளிக்க தனி நீதிமன்றம் என நடிக்கிறார்.

●●

'ரீல்ஸ்' த.வெ.க. ஆட்சியில் 2.3 சதவீதம் வீழ்ச்சி:

தமிழகத்தின் ஜி.எஸ்.டி. வருவாயில் சரிவு!

வருவாயை பெருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

சென்னை, நவ. 4 -

தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டின் முதல் 7 மாதங்களில், உள்நாட்டு ஜி.எஸ்.டி. வசூல் 2.3 சதவீதம் சரிந்துள்ளது. அக்டோபர் மாதத்திலும் வெறும் 3 சதவீத வளர்ச்சியே கிடைத்துள்ளது. ஆனால் அண்டை மாநிலங்கள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. இதனால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, வணிகச் செயல் பாடுகள் மற்றும் அரசின் வருவாய் நிலை குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. ஜி.எஸ்.டி. இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அக்டோபர் மாத புள்ளிவிவரங்களின்படி, தமிழகத்தில் கடந்த ஆண்டு இதே மாதத்தில் ரூ.11,298 கோடியாக இருந்த உள் நாட்டு ஜி.எஸ்.டி. வசூல், தற்போது ரூ.11,661 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூ.363 கோடி மட்டுமே கூடுதலாக வசூலாகியுள்ளது. இதன் வளர்ச்சி விகிதம் 3 சதவீதமாகும்.

ஆனால் அண்டை மாநிலங்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது தமிழகத்தின் நிலை மிகவும் மாறுபட்டுள்ளது. ஆந்திராவில் 24 சதவீதம், கேரளாவில் 23 சதவீதம், கர்நாடகாவில் 18 சதவீதம், தெலங்கானாவில் 14 சதவீதம் என ஜி.எஸ்.டி. வசூல் அதிகரித்துள்ளது. தேசிய அளவில் மாநிலங்களின் உள் நாட்டு ஜி.எஸ்.டி. வசூல் 16 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. தமிழகத்தில் மட்டும் வளர்ச்சி 3 சதவீதமாக இருப்பது கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழகத்தில் ஆகஸ்ட் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் வளர்ச்சி மைனஸ் 1 சதவீதமாகவும், செப்டம்பரில் மைனஸ் 5 சதவீதமாகவும் இருந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் கடந்த ஆண்டு ரூ.10,670 கோடியாக இருந்த வசூல், இந்த ஆண்டு ரூ.10,188 கோடியாகக் குறைந்துள்ளது. தொடர்ந்து இரண்டு மாதங்கள் சரிவைச் சந்தித்த நிலையில், அக்டோபரிலும் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்க வில்லை.

ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான 7 மாதங்களில் தமிழகத்தின் உள் நாட்டு ஜி.எஸ்.டி. வசூல் 2.3 சதவீதம் சரிந்துள்ளது. இதில் மாநில வரித்துறை நிர்வாகத்தின் கீழ் வசூலான தொகை 3.3 சதவீதமும், ஒன்றிய வரித்துறை நிர்வாகத்தின் கீழ் வசூலான தொகை 0.9 சதவீதமும் குறைந்துள்ளது. மாநிலத்தின் வருவாய் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இந்த பின்னடைவு அரசின் நிதி மேலாண்மைக்கு சவாலாக அமையக்கூடும்.

மாநில அரசின் சொந்த வரி வருவாய் எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்காத பட்சத்தில், புதிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் ஏற்கனவே செயல் படுத்தப்படும் வளர்ச்சிப் பணங்களுக்கான செலவினங்களை நிர்வகிப்பதில் அழுத்தம் ஏற்படலாம். சாலைப் பணிகள், குடிநீர் திட்டங்கள், மழைநீர் வடிகால் வசதிகள், அரசு மருத்துவமனைகள், பள்ளிகளின் மேம்பாடு போன்ற உள் கட்டமைப்புப் பணிகளுக்கு கூடுதல் நிதி தேவைப்படும் நிலையில், வருவாய் வளர்ச்சியில் ஏற்படும் வீழ்ச்சி அரசுக்கு சவாலாக இருக்கிறது.

தொழில் நிறுவனங்களின் உற்பத்தி, பொருட்களின் விற்பனை மற்றும் வணிகப் பரிவர்த்தனைகளுடன் ஜி.எஸ்.டி வசூல் தொடர்புடையது. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் விற்பனை நிலவரம், புதிய முதலீடுகள் உற்பத்தியாக மாறியுள்ளதா, புதிய வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளனவா என்பதும் முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கிடையே, நாடு முழுவதும் அக்டோபர் மாத மொத்த ஜி.எஸ்.டி வசூல் ரூ.2.31 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட 22.9 சதவீதம் அதிகம். உள்நாட்டு வருவாய் 15.8 சதவீதமும், இறக்குமதி மூலம் கிடைத்த வருவாய் 42.2 சதவீதமும் அதிகரித்துள்ளன. நாடு முழுவதும் வரி வசூல் அதிகரிக்கும் சூழலில் தமிழகத்தின் வளர்ச்சி மட்டும் குறைவாக இருப்பதற்கான காரணம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கு மாறாக, ஜ.ஜி.எஸ்.டி. பங்கீட்டுக்குப் பிறகு தமிழகத்துக்கு கிடைக்கும் வருவாய் அதிகரித்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அக்டோபரில் ரூ.7,460 கோடியாக கிடைத்த எஸ்.ஜி.எஸ்.டி. வருவாய் கடந்த ஆண்டு இதே மாதத்தில் கிடைத்த ரூ.6,895 கோடியைவிட 8 சதவீதம் அதிகம். ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான காலத்தில் பங்கீட்டுக்குப் பிறகு கிடைத்த வருவாய் ரூ.45,014 கோடியிலிருந்து ரூ.51,726 கோடியாக உயர்ந்து 15 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பது, புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவது, சிறு மற்றும் குறு தொழில்களைப் பாதுகாப்பது, வணிகப் பரிவர்த்தனைகளை அதிகரிப்பது என பல்வேறு துறைகளில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வெறும் முதலீட்டு அறிவிப்புகள் மட்டும் மாநிலத்தின் வருவாயை அதிகரிக்காது, அவை உற்பத்தியாகவும், வேலை வாய்ப்பாகவும், வணிக வளர்ச்சியாகவும் மாற வேண்டும். ஆட்சி பொறுப் பேற்றுள்ள தமிழக வெற்றி கழக அரசு, மாநிலத்தின் வருவாய் வளர்ச்சியை அதிகரிக்க இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழகத்தின் ஜி.எஸ்.டி வசூல் வளர்ச்சி குறைவதற்கான காரணம் என்ன? தொழில் மற்றும் வணிகத் துறைகளில் ஏற்பட்டுள்ள மந்தநிலையைச் சரிசெய்ய என்ன திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன? என்ற கேள்விகளுக்கு அரசு விரிவான விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசின் நிதி ஆதாரங்கள் வலுவாக இருந்தால்தான் புதிய நலத் திட்டங்களையும் உள்கட்டமைப்புப் பணங்களையும் தொடர்ந்து செயல் படுத்த முடியும். எனவே, ஜி.எஸ்.டி. வசூல் சரிவை சாதாரண புள்ளிவிவரமாக கருதாமல், அதற்கான காரணங்களை கண்டறிந்து வருவாயைப் பெருக்க த.வெ.க. அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதே தற்போது எழுந்துள்ள முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.

காலந்தாழ்த்தாமல் தகுதியானவர்களை உடனே நியமிக்கவேண்டும்!

தலைமை இன்றி தள்ளாடும் முதன்மை மருத்துவமனைகள்!

முக்கிய முடிவுகள் எடுப்பதில் சிக்கல்!

சென்னை, நவ. 4-

சென்னை மருத்துவக் கல்லூரியின் கீழ் இயங்கும் ராஜீவ் காந்தி மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு முதல்வர்கள் நியமிக்கப்படாததால் முக்கிய முடிவுகளை எடுப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

அதேபோல தமிழகத்திலேயே முன்மாதிரி மருத்துவ மையமாகத் தொடங்கப்பட்ட கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனையிலும் இயக்குநர் பணியிடம் பல மாதங்களாக காலியாக உள்ளது. நிர்வாகப் பணிகளில் சுணக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க விரைந்து அப்பொறுப்புகளுக்கு தகுதியானவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சென்னையின் அடையாளங்களில் ஒன்றாக விளங்கி வரும் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் தற்போது 44 துறைகள் உள்ளன. மொத்தம் 4,000 படுக்கை வசதிகள் இருக்கின்றன. நாள்தோறும் 12,000 முதல் 15,000 பேர் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். தினமும் 500 பேர் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர்.

இதைத் தவிர அண்டை மாநில மான ஆந்திரத்திலிருந்தும், வட மாநிலங்களில் இருந்தும் நோயாளிகள் சிகிச்சைக்காக இங்கு வருகின்றனர். சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த இந்த மருத்துவமனையின் முதல்வர் பதவி என்பது முக்கியத்துவமும், கௌரவமும் நிறைந்தது. அரசின் கொள்கை நிர்வாகக் குழுவிலும் அந்த முதல்வர் அங்கம் வகிப்பார். முழுமையான நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரங்கள் அவருக்கு உள்ளது.

அதுமட்டுமல்லாது ராஜீவ் காந்தி மருத்துவமனையின் கீழ் இயங்கும் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, குழந்தைகள் நல மருத்துவமனை, கண் மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் மனநல காப்பகம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பையும் அந்த முதல்வரே வகிப்பார்.

இவ்வாறாக, தமிழக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலேயே மிகவும் அதி காரமிக்க பொறுப்பாக, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை முதல்வர் பதவி கருதப்படுகிறது. அந்தப் பதவியை இதற்கு முன்பு வகித்து வந்த டாக்டர் சாந்தாராமன் கடந்த செப்டம்பர் 30ஆம் தேதியுடன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, பொறுப்பு முதல்வராக மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் சுதாகரன் நியமிக்கப்பட்டார். ஆனால், இப்போதும் முழு அதிகாரத்துடன் கூடிய முதல்வராக எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

இதேபோல, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் மிகவும் பழைமையும், பாரம்பரியமும் நிறைந்தது. அதன் முதல்வராக இருந்த டாக்டர் அரவிந்த், மாநில மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநராக அண்மையில் நியமிக்கப்பட்டார். இதனால் அவர் வகித்து வந்த பதவி காலியானது. இப்போது வரை அதற்கு எவரும் நியமிக்கப்பட வில்லை.

இதுதொடர்பாக, ஜனநாயக தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத் தலைவர் பாலகிருஷ்ணன் கூறியதாவது :-

சென்னையின் அதிமுக்கிய மருத்துவமனைகளின் தலைமைப் பொறுப்புகள் காலியாக இருப்பதால் பல்வேறு எதிர்விளைவுகள் ஏற்படும். பொறுப்பு முதல்வர், இயக்குநரால் மருத்துவமனையின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிர்வாக ரீதியான முடிவை எடுக்க முடியாது. புதிய திட்டங்களையும் செயல்படுத்த இயலாது. எனவே, காலந்தாழ்த்தாமல் தகுதியானவர்களை அப்பொறுப்புக்கு நியமிக்க வேண்டும் என்று டாக்டர்கள் சங்கத் தலைவர் பாலகிருஷ்ணன் கூறினார்.

